Srimathe Varaha Mahadesikaya Namaha
Sri Ranganatha Divyamani Padukabhyam Namaha

# Achaarya Vruksham

(E monthly of Srirangam srimath andavan asramam, Covai)

## Special Supplemnt on

## Chaturmasya Sankalpam/VRATAM @Aazhwar Thirunagari



## PARAABHAVA nama samvatsara Chaaturamasya sankalpam

## @ Aazhwar Thirunagari

| | |
|---|---|
| Vratham Period | 29.07.2026 to 26.09.2026 |

Scanned with OKEN Scanner




Scanned with OKEN Scanner

# ஆழ்வார் திருநகரி



**ஆழ்வார் திருநகரி என்பது நம்மாழ்வார் அவதரித்த பெருமை மிகு நவதிருப்பதி மற்றும் 108 திவ்ய தேசங்களுள் ஒன்றாகும்.** தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றங்கரையில் அமைந்துள்ள இத்தலம், ஆன்மீகம் மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க திருத்தலமாக விளங்குகிறது.

**ஊரின் பெயர்க் காரணம் மற்றும் பழைய பெயர்கள்**

- **திருக்குருகூர்**: பிரம்மனுக்குப் பெருமாள் குருவாக வந்து உபதேசம் செய்ததால் இத்தலம் முதலில் "திருக்குருகூர்" என்று அழைக்கப்பட்டது.
- **ஆழ்வார் திருநகரி**: வைணவத்தின் முதன்மை ஆச்சாரியரான நம்மாழ்வாரின் பிறப்புக்குப் பிறகு, இவ்வூர் "ஆழ்வார் திருநகரி" என்று பெயர் பெற்றது.
- **இதர பெயர்கள்**: தன்பொருநல், ஆதிசேத்ரம், குருகாசேத்ரம் போன்ற பெயர்களும் இவ்வூருக்கு உண்டு. குருகு என்றால் சங்கு என்று பொருள். தாமிரபரணி ஆற்றில் மிதந்து வந்த சங்கு இத்தலத்தில் தங்கியதால் இப்பெயர் பெற்றது என்றொரு வரலாறும் உண்டு.

**நம்மாழ்வார் அவதார வரலாறு**

- **மௌன நிலை**: இத்தலத்தில் அவதரித்த நம்மாழ்வார், பிறந்தவுடன் அழாமலும், பால் உண்ணாமலும் மௌன நிலையில் இருந்தார்.
- **புளிய மரம்**: இக்கோயிலில் உள்ள "உறங்காப் புளி" என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க புளிய மரத்தின் பொந்திற்குள் 16 ஆண்டுகள் தவம் செய்தார்.
- **மதுரகவியாழ்வார் சந்திப்பு**: வடநாட்டிலிருந்து வந்த மதுரகவியாழ்வார், நம்மாழ்வாரின் ஞானத்தைக் கண்டு வியந்து இவரைத் தன் குருவாக

Scanned with OKEN Scanner

ஏற்றுக்கொண்டார். நம்மாழ்வார் பாடிய 'நாலாயிர திவ்ய பிரபந்தப்' பாடல்கள் அனைத்தும் இத்தலத்துடனேயே பெரிதும் தொடர்புடையவை.

## ஆதிநாத பெருமாள் கோவில் சிறப்புகள்

- ***மூலவர்***: இக்கோயிலின் முக்கிய இறைவன் **ஸ்ரீ ஆதிநாத பெருமாள்** (நின்ற கோலம்). பிரபஞ்சம் தோன்றுவதற்கு முன்பே தோன்றிய நாதன் என்பதால் இவருக்கு இப்பெயர்.
- ***சுயம்பு மூர்த்தி***: இக்கோயில் மூலவர் தாமாகத் தோன்றிய சுயம்பு மூர்த்தியாவார். இவரது பாதங்கள் பூமிக்குள் இருப்பதாக ஐதீகம்.
- ***நவக்கிரகத் தலம்***: நவதிருப்பதி வரிசையில் இது ஒன்பதாவது தலம் மற்றும் **குரு (வியாழன்) பகவானுக்குரிய** தலமாகப் போற்றப்படுகிறது.

## மன்னர்களின் பங்களிப்பு மற்றும் கட்டிடக்கலை

- ***பழமை***: இக்கோவில் 1000 ஆண்டுகளுக்கும் மேல் பழமையானது.
- ***மன்னர்கள்***: இடைக்கால சோழர்கள், பாண்டியர்கள் மற்றும் நாயக்க மன்னர்களின் பங்களிப்போடு இக்கோவில் பல்வேறு காலங்களில் புதுப்பிக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்டது.
- ***கட்டிடக்கலை***: இங்குள்ள நாதஸ்வர மண்டபம், இசையெழுப்பும் கல் தூண்கள் மற்றும் மரச்சிற்பங்கள் ஆகியவை நாயக்கர் கால கட்டிடக்கலையின் உன்னத சான்றுகளாகும்.








Scanned with OKEN Scanner

**Sri Adinatha Swamy Temple, also known as Azhwar Thirunagari Temple** or Kurugur Nambi Temple, is located in Alwarthirunagari, a small town in the Thoothukudi district of Tamil Nadu, on the banks of the sacred Tamirabarani River. This place is one of the most important centers for Vaishnavism and is one of the 108 Divya Desams praised in the hymns of the Alwars.





The temple is believed to be over 1000 years old, with references dating back to the early medieval Chola period. It has received contributions and renovations from Pandya, Chola, and Nayak kings. The site itself is considered eternal, as it is the birthplace of the great saint Nammalvar (9th century), one of the twelve Alwars.

## Deity Details

Lord Vishnu is worshipped here as Adinatha Swamy / Aadi Nathar / Azhagiya Nambi. He is seen in a standing posture, blessing devotees along with his consort Goddess Adinathavalli Thayar.

The temple is unique because it houses the shrine of Nammalvar, the saint-poet, who is regarded as an incarnation of Vishnu’s discus (Sudarshana Chakra). His shrine is considered as important as the main sanctum.

## Architecture

The temple follows Dravidian style architecture, with a tall five-tiered Rajagopuram (gateway tower). Inside the complex, you can see large mandapams, beautifully carved pillars, and separate shrines for Nammalvar and Thayar. The temple’s layout follows the classic Vaishnava Agama principles. The Tamirabarani River flowing nearby adds to the sanctity, and devotees often take a holy dip before entering.

## History

This temple has been an important spiritual center for centuries. It is famous as the birthplace of Nammalvar, one of the greatest Alwar saints, who composed nearly one-fourth of the 4,000 Divya Prabandham hymns while staying here in meditation.

Scanned with OKEN Scanner

**Historical records show that Chola and Pandya rulers supported the temple, donating land and wealth for its upkeep. Later, the Vijayanagar and Nayak kings also contributed to its expansion.**

**Sthalapurana**

**Long ago, the region of Kurugur (present-day Alwarthirunagari) on the banks of the sacred Tamirabarani River was a place of intense penance and worship. Sages performed yagnas (sacrificial rituals) here, seeking Lord Vishnu's blessings. Pleased with their devotion, Lord Vishnu manifested here as Adinatha Swamy (the Primordial Lord) to bless them and promised to stay eternally at this holy place for the upliftment of mankind.**

**The most important part of the temple's Sthalapurana is about Nammalvar, one of the twelve Alwars. He was born in this very place around the 9th century CE, under a tamarind tree within the temple precincts. Local legends say that he was no ordinary child—he did not cry, speak, eat, or move after birth. Recognizing his divine nature, his parents left him under the tamarind tree near the temple tank, where he remained in deep yogic meditation for 16 years.**

**This tamarind tree is considered extremely sacred and is worshipped even today inside the temple. It is believed that Lord Vishnu himself resided in the heart of Nammalvar, guiding him spiritually.**

**This tamarind tree is considered extremely sacred and is worshipped even today inside the temple. It is believed that Lord Vishnu himself resided in the heart of Nammalvar, guiding him spiritually.**

**The Sthalapurana also says that Kurugur is one of the places where Lord Vishnu chose to dwell permanently to bless his devotees. That is why he is worshipped here as Adinatha Swamy (the Primordial Lord), standing in a benevolent form. Devotees believe that worshipping here grants them moksha (liberation) because of the combined grace of Adinatha Swamy and Nammalvar.**

**Festivals**

**Sri Adinatha Swamy Temple at Azhwar Thirunagari celebrates several important Vaishnava festivals with great devotion. The most famous is the Vaikasi Garuda Sevai, where the festival deities from all the nine Nava Tirupathi temples are brought together on Garuda Vahanam, and Nammalvar's idol is taken in procession, with his hymns sung in front of each deity. Another major festival is Vaikasi Visakam, marking the birth star of Nammalvar, celebrated with special rituals and recitations. The temple also observes Vaikuntha Ekadasi, Brahmotsavam, Krishna Jayanthi, Deepavali, and the Tamil New Year, all with colorful processions, music, and Vedic chanting, attracting thousands of devotees.**

Scanned with OKEN Scanner

# Divyadesams in and around Azhwar Thirunagari

| Temple Name | Presiding Deity | Associated Planet | Location |
|---|---|---|---|
| **Alwar Thirunagari** | Sri Aadhinatha Swamy | Jupiter (*Guru*) | Alwar Thirunagari |
| **Srivaikuntam** | Sri Vaikuntanatha Perumal | Sun (*Surya*) | Srivaikuntam |
| **Thiruvaragunamangai** | Sri Vijayaasana Perumal | Moon (*Chandra*) | Natham |
| **Thirupulingudi** | Sri Kaisnivendha Perumal | Mercury (*Budha*) | Thirupulingudi |
| **Thirutholaivillimangalam** | Sri Aravindalochanar | Rahu | Irattai Tirupathi |
| **Thirutholaivillimangalam** | Sri Devapiran | Ketu | Irattai Tirupathi |
| **Thirukkulanthai** | Sri Srinivasa Perumal | Saturn (*Shani*) | Perungulam |
| **Thenthiruperai** | Sri Makara Nedunkuzhai Kaathar | Venus (*Shukra*) | Thenthiruperai |
| **Thirukolur** | Sri Vaithamanidhi Perumal | Mars (*Angarakan*) | Thirukolur |

**Thirukurungudi**

## Vaishnava Nava Graha sthalam near Tirunelveli

Some of the Vaishnava temples are also associated with nava graha parihara sthalam. Following is the list of temples located near Tirunelveli that are associated with these grahas--

Sun (suryan) : Sri Vaikuntha natha perumal (Srivaikundam)
Moon (chandran): Sri Vijayaasana perumal temple (Thiru Varagunamangai)
Mars (sevvai): Sri Vaaitha Maanitha perumal temple (Thirukolur)
Mercury (budan): Sri Kaisana vendhar perumal temple (Thirupulingudi)
Jupiter(guru): Sri Aadinathar temple (Alwar Thirunagari)
Venus (shukran): Sri Makara Nedunkuzhaikkadan perumal temple (Ten Tirupperai)
Saturn (sani) : Srinivasa perumal temple, Perungulam
Dragon's tail (rahu): Sri Aravinda Lochanar perumal temple (Erattai Tirupathi)
Dragon's head (kethu): Sri Devapiran perumal temple (Erattai Tirupathi)



# ஆசார்ய அனுக்ரஹம் அடியோங்கள் அனுபவங்கள்

(பையூர் திருமலை கட்டம் கிருஷ்ணகுமார தாத தாஸன், பெங்களூரு)



## ஆசார்ய அனுக்ரஹம்:

ஆசார்யர்களே, நமது வழிகாட்டிகள். இவர்கள், எம்பெருமான் திருவடிகளை நமக்கு அறிவிக்கும் உபகாரத்தை செய்வதால், நமக்கு சரணாகதி, தத்துவங்களையும் எடுத்துச் சொல்வதுடன், மோக்ஷ ப்ராப்திக்கு, அனைத்துப் பூவுலக ஜீவன்களை உய்விக்கும் பொருட்டு எம்பெருமானாலேயே அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஆசார்ய சீலர்கள் அன்றோ? சம்ஸார பந்தங்களில் இருந்து விடுபட்டு உண்மையான ஆனந்தத்திற்கு நம்மை அழைத்துச் செல்லுகின்ற பேருதவிக்கு ப்ரதியுபகாரம் தான் ஏதேனும் உண்டோ?

*ஏற்றி மனத்தெழில் விள்க்கை, இருளனைத்தும் மாற்றினவர்க்கு ஒரு கைம்மாறு மாயனும் காணகில்லான்*

என்கின்ற தேசிகனுடைய செந்தமிழ் வரிகள் எத்தனை உண்மை அல்லவா? அடியோங்களும், ஆசார்யப் பேரருளைப் புரிந்து கொண்ட, 2019 மற்றும 2025 நிகழ்ந்த இரண்டு அனுபவங்களே இங்கே பகிர விரும்புகின்றேன்.

## ஆசார்யர்களின் சாதுர்மாஸ்யம்:

அவை, நமது ப்ராக்ருத ஆசார்யன், ஸ்ரீவராஹ மஹாதேசிக ஏற்றிருந்த சாதுர்மாஸ்ய கால வ்ரதங்களில் ஏற்பட்டன. பொதுவாக, ஆசார்யர்கள் வருஷ ருதுவின் காரணங்களால், அந்த காலத்தில், பலவிடங்களுக்கு செல்லும் தூர சஞ்சாரங்களைத் தவிர்ப்பார்கள். மேலும், ஓரிடத்திலேயே இருந்து கொண்டு, நித்ய அனுஷ்டானங்களையும், மேற்கொள்வதுடன், அடியார்களுக்காக, விசேஷ பெருமாள் மற்றும் சம்ப்ரதாய கைங்கர்யங்களையும் செய்ய தயார் படுத்தும் விதங்களில் தங்களை ஈடுபடுத்தும் முயற்சிகளைப் பெரிதும் கொள்வார்கள். இதனால் அடியார்களோடு நெருங்கிப் பழகி, அவர்களுடைய குறைகளை நிவர்த்தி செய்யவும் வழி வகுக்கின்றது. அடியார்களுக்கும், தங்கியபடி, ஆச்ரம ஆராதனப் பெருமாளோடு, ஆசார்யரையும் கண்குளிர சேவித்து, பிரார்த்திக்க,

Scanned with OKEN Scanner

உகந்த காலமாக அமைகின்றது. அந்த வகையில் அடியோங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பகிர, ஆசார்ய தயவோடு முயல்கின்றேன்.

## திருவிடவெந்தை, வைபவம், 2019:

ஆசார்ய பீடமேற்ற பின் முதலாம் சாதுர்மாஸ்ய நிகழ்வு, ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீவராஹ மஹாதேசிகன் திருவிடவெந்தை ஆச்ரமத்தில் எழுந்தருளி நடத்திக் கொண்டிருந்தார். 16 ஜூலை 2019 தொடங்கி இருந்தது. அடியேன் ஜூலை இறுதி வாரத்தில் சென்னையில் தங்க வேண்டி இருந்தது. வாசம் மஹாராஷ்டிரா மாநிலத்தில் இருந்தாலும், கடல் கடந்த பிரயாணங்களின் பரிகாரப் ப்ரீத்திகளின் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதன் காரணமாக, திருக்கடல் மல்லை சமுத்திர ஸ்நானம் மேற்கொண்டு, கடல் மல்லை பெருமாளையும் சேவித்துப் புண்ணிய தீர்த்தங்களை ஸ்வீகரித்துக் கொண்டு, சென்னை திரும்பிடும் சமயத்தில் திருவிடவெந்தை கோவிலருகே சாதுர்மாஸ்ய ஸங்கல்ப மேற்கொண்டு இருந்த நம்மாசார்யனை சேவிக்க, அடியோங்கள் விழைந்தோம். பாரியாளுடன் காலை வேளை சுமார் ஏழு மணி அளவிருக்கும் ஆசார்யன் ஆராதனங்கள் செய்யத் துவங்கிய ஸமயம். அந்த மண்டப அரங்கத்தில் திரையிடப்பட்ட இடத்திற்கு வெளிப்புறத்தில் அடியோங்கள் மட்டுமே. பின்னர் தான் ஒருவர் ஒருவராய் , ஆச்ரம சிஷ்யர்கள் வெகு குறைவாக இருந்த நேரத்தில் அடியோங்கள் கையில் கொண்டு வந்திருந்த பழங்கள், சில புஷ்ப மாலைகள், உதிரிகளாக பலவித புஷ்ப சகிதம் நின்ற சப்தத்தைக் கேட்டது தான் தாமதம். விரைவில் திரைச்சீலையில் விலக்கிக் கொண்டு அடியோங்களிடம் பரிவோபசார வார்த்தைகளால், எங்கிருந்து வந்துள்ளோம் போன்ற விசாரங்கள் கேட்டபின், முதலில் திருக்கோவில் பெருமாள் சேவை முடித்து விட்டு, பிறகு இங்கே வந்துவிடுமாறு தெரிவித்தார். இன்னமும் ஒரு மணிக்கு மேலாக நேரமாகும் என்பதால் அங்கே தீர்த்தப் பிரஸாதமும் வாங்கிக் கொள்ளச் சொன்னதோடு அவசியம் ஆச்ரம பெருமாள் தரிசனமும் பெற்றுப் போகும்படி பணித்தார். அவ்விதமே திருக்கோவில் ப்ரதக்ஷிணம் செய்து, திருவிடவெந்தை பெருமாளையும் திவ்யமாக ஸேவித்துக் கொண்டு, அந்த சன்னதியில் சஹஸ்ரநாமம், நித்யனுஸந்தான பாசுரங்களைப் பாராயணம் செய்து முடித்து காலை சுமார் 9 மணிக்கு ஆச்ரம பெருமாளை சேவித்து ஆசார்ய தீர்த்த, சடாரி கோஷ்டிகளும் பெற்றுக் கொண்டோம். தினசரி அனுசந்திக்கும் கத்யத்ரய, பாதுகாஸஹஸ்ர , தேசிகர் ஸ்தோத்ர பாடங்கள் முடிந்த பின் அனுக்ரஹ பாஷணமும் செவியுற்றபின் தனித்தனியே அடியார் குழாங்களை விசாரித்து

Scanned with OKEN Scanner

அறிவுரைகளும், பதிலுரகளும் அளித்த வரிசையில் அடியோங்கள் கடைசியாக சேவித்தோம் அப்போது அடியோங்கள் காலையில் முதல் முதலாக ஆச்ரம மண்டபத்தில் வந்ததை ஞாபகம் கொண்டு ஏதேனும் தன்னிடம் கேட்க வந்துள்ளதாக வினவ, எங்கள் மனதுள் தோன்றியதை எவ்விதம் தாமே அறிந்ததை கண்டு வியந்து கொண்டோம். காரணம், அடியேன் கேட்க வந்த விஷயம் ஒன்று இருந்தது. (வைகுந்தவாஸி) தகப்பனாரின் நூறாவது (சதமான மஹோத்ஸவ ஆரம்பம்) ஆண்டின் துவக்கத்தை நடத்துவது தொடர்பான சில விசேஷங்களும், தெரிவித்து, ஆசார்யரின் அருளாசிகளும், அனுக்ரகம் மற்றும் மந்த்ராக்ஷதைகள் பெறும் பொருட்டு வந்ததைச் சொன்னோம். எந்த ஊர், கிராமம், பெருமாள் யாவையும் கேட்டதோடு, தாம் சூடிய ரோஜா மலர் மாலையை அடியேனுக்கு அளித்து, சீக்கிரமே, அடியோங்களின், ஊர்க்கிராம குலதெய்வப் பெருமாளுக்கு பூஜாக்ரம கைங்கர்யம் செய்து தகப்பனாருடைய மாஸாந்திர திருநக்ஷத்ரத்தில் ஆரம்பிக்க வார்த்தைகள் அருளி அனுப்பிய விதம் அடியோங்களுக்கு ஆச்சரியத்தை அளித்தது. எத்தனை சந்தோஷம் உள்ளும், புறமும் பெற்றோம் என்பதை வெறும் வார்த்தைகளால் விவரித்து முடியாது.

ஆசார்யன் பேரருளாசிகள் பெற்ற, இரண்டாம் நாளில் ஆண்டவன் கூறியவிதம், குடும்ப உறுப்பினர்கள் சுமார் 20 பேரோடு, அடியோங்களின் ஊர்க்கோவிலுக்குச் செல்லத் தயாரானோம். அந்தக் கோவில், பையூர் (திருவண்ணாமலை மாவட்டம், உத்திரமேரூர் அருகில்) உள்ள கிராமத்தில் முன்னோர்களால் சுமார் 150 வருடங்களாக நிர்மாணிக்கப்பட்டு நித்ய பூஜைகள் கண்டருளும், ஸ்ரீதேவி, பூமாதேவி ஸமேத, ப்ரஸன்ன ஸ்ரீ வேங்கடஸ்வாமி திருக்கோவிலாகும். அங்கே எழுந்தருளியிருக்கும் மூலவப் பெருமாள் சன்னதியிலும் திருமஞ்சனம் நடத்தி, ஸ்ரீசுதர்ஸனர், ஸ்ரீந்ருஸிம்ஹ, ஸ்ரீஆஞ்சனேயர் சன்னதிகளுக்கும், திவ்யமான மாலைகள், சரங்கள், நூதன வஸ்திரங்கள் அனைத்தும் சாற்றி மகிழ்ந்தோம். அன்றைய தினத்தில் வந்திருந்த கிராம மக்களுக்கும் அன்ன பிரஸாதங்களையும் வழங்கியபடி, ஆசார்யன் உகப்புக்கு ஏற்ப, அடியோங்கள் தகப்பனாருடைய சதமான மஹோத்ஸவத்தை ஆரம்பித்தோம். தொடர்ந்து வருடம் முழுதும் மாஸ திருநக்ஷத்ரங்களை கொண்டாடித் தொடங்கியபடி மீண்டும் பூனா வந்து சேர்ந்தோம்.ஆசார்யன் நியமனப் படியே, நாங்களும் வருஷ முழுவதும் மாஸாந்திர தகப்பனாருடைய திருநக்ஷத்ரத்தில் ஸ்லோகங்கள், சேவாகால, பாராயணம் செய்து மகிழ்ந்தோம். இதை இங்கே சொல்வதற்கு காரணம் என்னவென்றால், தகப்பனாருடைய (2020ல்) சதமஹோத்ஸவமானது

கொரோனா காலத்தில் வந்து விட்டதால், நேரிலே சேர்ந்து கொண்டு, கொண்டாடவே முடியாது போய்விட்டது. மேலும், குடும்பத்தில் அனைவரும் வெளியே வந்து, ஒன்று சேராத நிலையில் சங்கடப்பட்டு, தொலைத் தொடர்பில் இணையவழி(online)யில் பிரபந்த, சேவாகாலம் மற்றும் உபன்யாஸங்கள் செய்து கொண்டாடினோம். ஊர்க்கோவிலில் ஒன்று சேர ப்ராப்தமே கிட்டவில்லை. அதனால் தான் என்னவோ, நூறாவதாண்டு ஆரம்ப நிலையிலேயே ஊர்க்கோவிலில் சிறப்பாக நடத்திட, ஆசார்யர் திருவாக்கால் அருளியதோடு துவக்கம் இனிதாக நிறைவேறியது என்று சொல்லும் வண்ணம் அடியோங்களுக்கு இன்றும் அந்த ஆசார்ய அருள் நிகழ்வு பெரும் வியப்பையே தருகின்றது. அதுவும் ஆசார்யன் இன்னருளே!

## திருப்புல்லாணி, வைபவம், 2025:

அடியேன் மனதிற்கு நெருக்கமாக உள்ள நெகிழ்ச்சி அருளிய ஆசார்ய அனுக்ரகம் இன்னமும் உணர்ச்சி பொங்கிட வைக்கின்றது. ஜூன் மாதம் இறுதி வாரத்தில் இருந்தே அடியேன் ஸ்ரீரங்கத்தில் தங்கியபடி க்ஷேத்ர திவ்ய தம்பதி பிராட்டியையும், பெருமாளையும் தரிசித்தபடி, ஆச்ரமத்தில் ஆசார்யனையும் தொடர்ந்து சேவித்து அனுக்ரஹமும் பெற்றோம். பின்னர், திருப்புல்லாணி சாதுர்மாஸ்ய நிகழ்வும் நடைபெற்றது. ஜூலை 10ம் தேதியன்று, பல்வேறு, ஆசிரியர் பெருமக்களின் க்ரந்த, புத்தகங்கள் அவற்றோடு, அடியேனுடைய "**ஆழ்வார்கள் மொழிந்த சரணாகதி**" என்னும் தலைப்போடு சிறு புத்தகம் திருப்புல்லாணி ஆச்ரமத்தில் ஆசார்யன் திருக்கரங்களால் வெளியீடு நிகழ்வும் சேர்ந்திருந்தது. அந்த நிகழ்ச்சியில் நேரடியாக செல்லும் பாக்கியம் இருந்ததால் அதற்காக, பிரத்யேகமாக வாடகை ஊர்தியில் குடும்ப உறவினர்களோடு சென்றிருந்தோம். முந்தைய நாள் ஆச்ரமத்திலிருந்து கிடைத்த தகவல் பிரகாரம் அடுத்த நாள் (10.7.2025) தீர்த்த ப்ரஸாத கோஷ்டி காலை 8 மணிக்குள் முடிந்து விடும் என்பதை நினைவில் கொண்டு, ஸ்ரீரங்கத்திலிருந்து காலை சுமார் 5 மணிக்குள் கிளம்பி வந்தோம். போக்குவரத்து சில இடங்களில் தடைபட்டதால் திருப்புல்லாணி ஆண்டவன் ஆசிரமத்தை எட்டிய போது கிட்டத்தட்ட 9 மணி நெருங்கி இருந்தது. ஆச்ரம வாசல் வரை, நீண்டிருந்த வரிசைகளில் காத்திருந்த சிஷ்யர்களுக்கு பெருமாள் தீர்த்தங்கள் ஆசார்யன், ஸ்ரீமதாண்டவன், ஸ்ரீவராஹ மஹாதேசிக தேசிகன், தமது திருக்கரங்களால் சாதித்த வண்ணமாக நடந்து சற்றளவில் முடியும் என்ற பொழுதில், அடியோங்களின் வாகனம் ஆச்ரம வாசலை அடைந்தது. இதைக் கவனித்த அடியேனும் பார்யாளும்,

Scanned with OKEN Scanner

உறவினர்களும் அவசர,அவசரமாக காரிலிருந்து இறங்கி ஓடிவர முயற்சித்தோம். அங்கே, எம் ஆசார்யன், எமக்காவே, என்றார் போல, “நிதானமாக வாரும், பார்த்து வாரும்” என்று அக்கறையோடும், பரிவோடும் கூறியதை எண்ணி விழிகளில் ஆனந்த பாஷ்பம் வெளிவந்தது. உண்மையில், நடக்கும் போது, அடியேனுடைய வலது கால் முட்டி தன்னில் அதிக ச்ரமத்தை நான் உணருவதை அறிந்திருப்பாரோ? கடைசியாக வந்த அடியோங்களுக்காக, வரிசையில் சேரும் வரைக் காத்திருந்து தீர்த்த ப்ரஸாதங்களும் அருளியதை ஆண்டவன் திருக்கரங்களால் பெற்றுக் கொண்டது, வாழ்விலே மேலான அனுபவம் என்றே கருதுகின்றோம்.

அன்று புத்தக வெளியீடு உட்பட, அனைத்து நிகழ்வுகளிலும் பங்கேற்று, திருப்புல்லாணி ஸ்ரீஆதி ஜகன்னாதப் பெருமாள் சன்னிதிகளையும் ஸேவித்துக் கொண்டு, ததீயாரணத்திலும் கலந்து கொண்டு, சாயங்காலமாக, அங்கிருந்து புறப்பட்டு ஸ்ரீரங்கம் திரும்பினோம். எல்லாமே ஆசார்யன் திருவருளால் நடந்தாற்






போலவே, தெரிகின்றது.

மேற்சொன்ன இரண்டு வைபவங்களும் அடியோங்களுக்கு இன்றளவும், பசுமையாக இருந்து கொண்டு, ஆசார்யன் பேரருளைப் பெற்ற நிறைவும் மனதை விட்டு நீங்காமல் இருக்கின்றன. அவை, அடியோங்களுக்காக, ஆசார்யன் மூலமாக, எம்பெருமான் அளித்த பிரஸாதங்களாகவே கருதுகின்றோம். ஆசார்யன் திருவடிகளுக்குப் பல்லாண்டு...பல்லாண்டு. சுபமஸ்து. ஸ்ரீமதே ஸ்ரீவராஹ மஹாதேசிகாய நம:

*********

# Importance of
# Yatis chaturmasya vrata

**Yatis Chaturmasya Vrata** is a highly sacred four-month period of austerity observed by Hindu ascetics (Yatis or Sannyasis) during the monsoon season. While householders practice various dietary restrictions during this time, the vow holds foundational significance for monastic orders. It balances strict scriptural compliance with environmental compassion and provides a unique spiritual anchor for the broader community.

## 1. Scriptural Compliance and the Rule of Rest

According to ancient codes of asceticism (such as the *Narada Parivrajaka Upanishad*), a Sannyasi must remain a constant wanderer. They traditionally stay only one night in a village and a few days in a city to avoid developing worldly attachments. However, the scriptures explicitly command an exception during *Varsha Ritu* (the rainy season), mandating that they **stay stationary in one location** for this four-month block to focus entirely on internal contemplation.

## 2. Ahimsa (Non-Injury) and Environmental Compassion

During the heavy monsoon rains, the earth undergoes a massive regenerative phase, causing a surge in tiny insect life, crabs, and rodents emerging from the soil.

- Constant travel by foot would inevitably lead to trampling and killing these microscopic or small living beings.
- To strictly uphold the core monastic vow of **Ahimsa** (absolute non-violence), Yatis halt all travel to prevent any accidental harm to nature.

## 3. Spiritual Knowledge and Community Welfare

The mandatory stay creates a deeply beneficial symbiotic relationship between the ascetic and the local community.

- **Spiritual Awakening**: Because the Yati is stationary, local householders take advantage of their presence to clear doubts, listen to scriptural discourses, and receive blessings.
- **Immense Merit for Devotees**: Visiting, serving food (Bhiksha Vandanam), or simply having the sight (Darshan) of a Yati observing this Vrata is believed to bring multi-fold spiritual merits to householders.
- **Preservation of the Shastras**: Yatis utilize this period of isolation from travel to train qualified disciples and write or study complex philosophical commentaries.

## 4. Deepened Tapasya (Austerity)

The Vrata acts as an intense physical and mental cleansing ritual. By strictly limiting sensory inputs and cutting out specific foods month by month (such as leafy greens, yogurt, milk, and certain pulses), the ascetic **minimizes material gratification** and redirects that physical energy entirely into meditation on the Supreme Brahman.

********************************

Scanned with OKEN Scanner

# HH Srí Varahamahadesikan






Our Asramam @ Azhwar Thirunagri

Scanned with OKEN Scanner

# CHATUR MAASYA SANKALPAM AT THIRUPULLANI IN 2025





Scanned with OKEN Scanner







Scanned with OKEN Scanner



**Thiruchaanur Divyadesa malai maryadhai**

Scanned with OKEN Scanner



**Malai Maryadhai from Srirangam Asramam Periandavan Sannidhi**

Scanned with OKEN Scanner

# CHATUR MAASYA SANKALPAM AT KUMBAKONAM IN 2024










Scanned with OKEN Scanner



Scanned with OKEN Scanner



SRIRANGAM DD MALAI MARIYADHAI

Scanned with OKEN Scanner



THIRUCHANOOR DD MALAI MARIYADHAI

Scanned with OKEN Scanner



KANCHI THEPERUMAL DD MALAI MARIYADHAI



UPANYASAKARAR DR.VENKATESH PRESENTING THE THIRUVEZHUKOOTRIKAI ON HH

Scanned with OKEN Scanner

# CHATUR MAASYA SANKALPAM AT HRISHIKESH IN 2023




Scanned with OKEN Scanner



## @ Hrishikesh



Scanned with OKEN Scanner





Scanned with OKEN Scanner



Scanned with OKEN Scanner






Scanned with OKEN Scanner



Scanned with OKEN Scanner



Scanned with OKEN Scanner

# IMPORTANCE OF CHAATURMASYA SANKALPAM & VRATHAM

- **4 months:: starting from Aavani and ending with kaarthikai**
- **Rainy season**
- **Jeevarasies like insects & worms more in the soil during this time**
- **Sancharam by yathies during this period might cause accidental death to these living entities**
- **Yathies take a vow not to travel during these 4 months**
- **Stay in one place**
- **This vratham is also known as Chaaturmasya Vratham.**
- **For all types of yathies, this vratham is important**
- **Power of this vratham increases every day from day one to the last day of the observance.**
- **The yathies during these 2/4 months perfom japam, homam,aaradhanam, upadesham and study of Shashtras.**
- **These yield greater fruits during the entire year.**
- **Period : 2/4 months**
- **Ideally it is 4 months from sayana ekadasi (Aashada Shukla ekadasi ) to Utthana ekadasi in the month of Karthikai**
- **Lord Vishnu::**
  **Sayana ekadasi: Starts HIS Yoga nidhra**
  **Utthana ekadasi: Lord wakes up.**
- **These 4 months:**

| | |
|---|---|
| **Aashada-July-August** | **Lord Sridharan** |
| **Bhadrapadha-Aug-Sep** | **Lord Hrushikesasn** |
| **Asvina- Sep-Oct** | **Lord Padmanabhan** |
| **Karthika- Oct-Nov** | **Lord Dhamodharan** |

- **Daily routine during CV**
  **-The Nithya karmas**
  **-Abhigamana Aaradhanam**
  **-Mruth sangrahanam**

- **Small amount of soil (earth) is consecrated (Mruth sangrahanam) along with aavahanam & aaradhanam for BhooVaraha perumal & Bhoo piraatti**
- **HH collects the soil required for HIS anushtanams during the CV**
- **There is a veda vAkyam which says "pakshA vai mAsA:" i.e. a paksha (15 days) can be considered as a month.**
- **Since it is very difficult nowadays for yathis to stay in a place for 4 months due to their sishyas wishes for their achArya to undertake sanchAram constantly and reach out to them, the sankalpam is nowadays undertaken by yathivaras for 4 pakshams i.e. 2 calendar months instead of 4 calendar months.**
- **This vratham is generally started on the Pournami following Aani-AmAvAsyai and completed on the Pournami day following Aavani-AmAvAsyai.**

**...Excerpts from PPT of Oppiliappan Koil Vardachari Sadagopan**

Scanned with OKEN Scanner

# Know the details of the Sankalpam & Vratam

## Other activities

- Thurumudi Vilakam
- Purifying bath for special aaradhanam
- Recital of Pancha shanti manthras on HH's arrival after snanam

### Main sankalpam

**By HH ::**

"आषाढ पौर्णमासि पर्यन्तं चातुर्मास्य व्रथं स्थास्ये।"

"Aashada pournamasi paryantham chaaturmasya vratham sthaasye."

**By Sishyas gathered there::**

"निवासंतु सुक्कीन अत्रा गमिष्यामः कृतर्थान यथा शक्ति च सिशरुसँ करिष्यामो वयं मुदा "

"Nivasanthu sukeen athra gamishyamaha krutharthan yatha shakthi cha sishrusam karishyamo vayam mudha."

(Oh aacharya, please stay in this location with all happiness & bless us to have the opportunity to perform kainkaryams for you. We take the vow to serve you to the best of our abilities.)

- chant Bhoo sooktha
- veda parayanam during the aradhanam
- Divya desa Maalai Maryadhai to HH
- Lord blesses HIM for successful observance of Chaaturmasyam

### Dietary restrictions during this period

Root, leaf, shoot, tip, fruit, skin, sprout, stalk, flower and skin of vegetables

### Athri Smuruthi says::

"The Lord has 2 forms. Moving & unmoving. The moving form is the yathi and the unmoving sthira bheram is the Lord in archa form worshipped at the temple."

The significance of starting the sankalpam on Aashada Pournami: is that it is celebrated as the avathAram day of the great sage VyAsa who organized the Apourusheya Vedas into 4 major sections.(Rig: 1131 Sakhas or Recensions divided into Rig (21 sakhas), Yajur: 101 sakhas, Sama: 1000 sakhas and Atharvana Veda: 9 sakhas); wrote the Brahma Sutras (555 Sutras); wrote 18 Maha Puranas which includes Srimath BhAgavatham (Brahma Purana, Padma Purana, Bhagavata Purana, Siva Purana, Skanda Purana, Garuda Purana, Brahmanda Purana etc. Of these 18, Vishnu Purana was written by Vysacharya's father Parasaracharya, but was edited and presented by Vyasa). He is also celebrated as "VyAsAya vishnu rupAya vyAsa rupAya vishnave" in Vishnu Sahasranam and by our Swami Desikan as "mey alladhu viLambhadha vyAsan kAttum vilakillA nan neRiyE viRaindhu selveer". Such is the great significance of this chAturmAsya sankalpam day.

Scanned with OKEN Scanner

# Chatur Maasya Sankalapam / Vratam at Thirumala --2022





Scanned with OKEN Scanner





Scanned with OKEN Scanner





Scanned with OKEN Scanner

# ஆஸ்ரம ஸ்வீகாரம் @ ஸ்ரீரங்கம்

# October 21, 2018

# Srivilambi Aippasi Dwadasi Sadayam



Scanned with OKEN Scanner



## ப்ரக்ருதம் ஆண்டவன்

## ஸ்ரீ வராஹ மஹாதேசிகன்

| எண் | சாதுர்மாஸ்யம் | சங்கல்பம் மேற்கொண்ட இடம் |
|---|---|---|
| 1 | விகாரி<br>Vikari | திருவெடந்தை<br>Thiruvedanthai |
| 2 | சார்வரி<br>Sarvari | ஸ்ரீரங்கம்<br>Srirangam |
| 3 | பிலவ<br>Plava | சென்னை<br>Chennai |
| 4 | சுபகிருது<br>Subhakruthu | திருமலை<br>Thirumalai |
| 5 | சோபகிருது<br>Shobhakruthu | ஹ்ரிஷிகேஷ்<br>Hrishikesh |
| 6 | குரோதி<br>Krodhi | கும்பகோணம்<br>Kumbakonam |
| 7 | விசுவாவசு<br>Visuvaavasu | திருப்புல்லாணி<br>Thirupullani |

Scanned with OKEN Scanner




## <u>நமது பூர்வாசார்யார்களின் விரத விவரங்கள்</u>

| <u>ஆசார்யனின் திருநாமம்</u> | <u>சாதுர்மாஸ்யம்</u> |
|---|---|
| திருக்குடந்தை தேசிகன் கோபாலார்ய மஹாதேசிகன் (3 சன்யாச சிஷ்யர்கள்) | இல்லை |
| வழுத்தூர் ஆண்டவன் | 52 |
| திருத்துறைப்பூண்டி ஆண்டவன் | ** |
| பெரியாண்டவன் | 55 |
| சின்னாண்டவன் | 10 |
| காடேந்தேதி ஆண்டவன் | 4 |
| தேரெழுந்தூர் ஆண்டவன் | 23 |
| ஆக்கூர் ஆண்டவன் | 17 |
| தென்பரை ஆண்டவன் | 15 |
| திருக்குடந்தை ஆண்டவன் | 26 |
| மைஸூர் ஆண்டவன் | 1 |
| ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன் | 29 |

** விவரங்கள் தெரியவில்லை

Scanned with OKEN Scanner



ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்ரீ வராஹ மஹாதேசிகனின்
சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் - பெரியாச்ரமம், ஸ்ரீரங்கம் 5-7-2020

Scanned with OKEN Scanner







Scanned with OKEN Scanner



Scanned with OKEN Scanner

# சாதுர்மாஸ்ய வ்ரதம்-1

- சாதுர்மாஸ்ய வ்ரதம் என்பது துறவிகள் மழைக்காலமான ஆடி மாத பௌர்ணமி முதல் கார்த்திகை மாத பௌர்ணமி வரை, நான்கு மாதங்கள் ஒரே இடத்தில் தங்கி, (தற்போது பக்ஷோ வை மாஸா: என்கிற ரீதியில் 4பக்ஷங்களை 4மாதமாகக் கொண்டு) வேத வேதாந்தங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்வார்கள். இந்த மாதங்களில் துறவிகள் உணவு முறையில் சில கட்டுப்பாடுகளை வகுத்துக் கொள்வார்கள். முதல் மாதம் உணவில் காயும் பழங்களும் இருக்கும். இரண்டாம் மாதம் பால் தவிர்ப்பார்கள். மூன்றாம் மாதம் தயிரை தவிர்ப்பார்கள். நான்காம் மாதம் பருப்பு வகைகளைச் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள்
- இந்த சாதுர்மாஸ்ய காலத்தில் கடைபிடிக்கும் விரதத்தை வேதம் மற்றும் வேதாந்தக் கல்வியை கற்பித்த ஆசார்யர்களை நினைவு கூறும் வகையில் ஆடி மாத பௌர்ணமி அன்று துறவிகள் வேதவ்யாசரை வழிபட்டுத் துவக்குவார்கள். குரு பூர்ணிமா என்று அழைக்கப்படும் வ்யாச பௌர்ணமி நாளில் (ஆடிப் பௌர்ணமி) எங்கிருந்தாலும் ஆசார்யாளை மனதார வணங்கினால் தாங்கள் பெற்ற வேதாந்தக் கல்வி மேன்மேலும் சிறப்பாக வளரும் என்பது நம்பிக்கை.
- ஆஷாட பௌர்ணமி வ்யாச பௌர்ணமி என்று போற்றப்படுகிறது. எனவே வ்யாச பௌர்ணமி தொடங்கிய நாளிலிருந்து அடுத்த நான்கு மாதங்கள் மழைக்காலமாகும். இந்தக் காலகட்டத்தில் பல்வேறு ஜீவராசிகளும் இடம் பெயர்ந்து வாழுமாம். எனவே இந்தக் காலகட்டத்தில் ஸந்யாசிகள் அவற்றுக்குத் தொந்தரவு ஏற்படா வண்ணம் ஒரே இடத்தில் தங்கியிருப்பார்கள்.
- ஆஷாட பௌர்ணமி அன்று சாதுர்மாஸ்ய வ்ரதம் செய்து அந்த நாள் முதல் ஒரே இடத்தில் நான்கு மாதங்களுக்குத் தங்கியிருப்பார்கள். இந்த நான்கு மாதமும் உணவு அடிப்படையில் சில கட்டுப்பாடுகளோடு ஒரு விரத முறையையும் அனுஷ்டிப்பார்கள். இதற்கு சாதுர்மாஸ்ய வ்ரதம் என்று பெயர்.
- இந்தக் காலகட்டத்தில் அவர்கள் பூஜைகள், மந்திர ஜபங்கள், வேத, வேதாந்தக் கல்விகளை கற்பித்தல் ஆகியவற்றில் ஈடுபடுவார்கள். இந்தக் காலகட்டத்தில் செய்யும் மந்திர ஜபங்கள் தனக்கு மட்டுமன்றி உலகம் முழுமைக்கும் பன்மடங்கு பலன் தர பூர்வாசார்யர்களை ப்ரார்த்திப்பார்கள்.
- ஸந்யாசிகள் மட்டுமன்றி இல்லறத்தில் இருப்பவர்களும் கட்டாயம் இந்த நான்கு மாதமும் தினமும் ஒரு குறிப்பிட்ட கால அளவை நிர்ணயித்து (5 நிமிடம் முதல் அவரவர் வசதிக்கு ஏற்ப நேரம் ஒதுக்கி) பகவானின் நாமத்தை தினமும் உச்சரித்து வந்தால் சகல துன்பங்களும் நீங்கும் என்பது ஐதிகம்.
- அவரவர்களின் இஷ்ட தெய்வ நாமத்தை உச்சரிக்கலாம். குறிப்பாக நீங்கள் வழிபடும் மகானை நினைத்து அவர் படத்துக்குத் தினமும் ஒரு மலராவது சாத்தி வணங்குவது சிறப்பானது.
- நம் வாழ்வில் இருக்கும் பல பிரச்னைகள் தீர்க்க இந்தக் காலகட்டத்தில் செய்யும் இத்தகைய வழிபாடுகள் பயன் அளிக்கும்.



Scanned with OKEN Scanner

# சாதுர்மாஸ்ய விரதம்-2

- ஒவ்வொரு வருடமும் ஸூர்யன் கடக ராசிக்கு வரும் போது மஹா விஷ்ணு யோக நித்திரையில் ஆழ்ந்து , ஸூர்யன் துலா ராசி ப்ரவேசிக்கும் போது விழித்து எழுகிறார்.

- தேவசயனி ஏகாதசியிலிருந்து தேவோத்தானி ஏகாதசி வரை சாதுர் மாஸ்ய விரதம் அனுஷ்டிக்க வேண்டும். துவாதசி, பௌர்ணமி, அஷ்டமி, அல்லது மாத பிறப்பிலிருந்து விரதத்தை தொடங்கி கார்த்திகை மாதம் சுக்ல பக்ஷ துவாதசியில் நிறைவு செய்ய வேண்டும்.

- ஶ்ராவண (ஆவணி) மாதத்தில் காய்கள், பழம்;
- பாத்ரபத ( புரட்டாசி)மாதத்தில் தயிர்,
- ஆசுவின ( ஐப்பசி)மாதத்தில் பால்,
- கார்த்திகம் மாதத்தில் பருப்பு வகைகள் சாப்பிடாமல் இருந்தால் நோய் நொடி இல்லாத பூரண ஆரோக்கியம் கிட்ட பெறுவர்.

- ஆஷாட மாதம் சுக்ல பக்ஷ த்வாதசி முதல் கார்த்திகை மாதம் ஏகாதசி வரையில் நான்கு மாதங்கள் நாம் உட்கொள்ளும் உணவில் ஒரு சில வற்றை விலக்கி கட்டுபாடுகளுடன் இருப்பதே சாதுர்மாஸ்ய வ்ரதம்.
- ஶ்ராவண (ஆவணி) மாதத்தில்  உணவில் விலக்க வேண்டியது :காய்,, புளி, மிளகாய், தேங்காய்.
- பாத்ரபத ( புரட்டாசி)மாதத்தில் தயிர் மற்றும் அவற்றால் தயாரிக்கும் பொருட்கள் கூடாது. தயிறில் ஒன்றுக்கு நான்கு பங்கு ஜலம் விட்டு மோராக உபயோகிக்கலாம். நிறம், தரம்,, ருசி குணம் மாறி விடுவதால் மோர் சாப்பிடலாம்.

- ஆசுவின ( ஐப்பசி)மாதத்தில் பால் மற்றும் பாலை கொண்டு தயாரிக்கும் உணவு வகைகள் கூடாது. ஆனால் தேங்காய் பால் உபயோகிக்கலாம்.
- கார்த்திகம் மாதத்தில்  த்வி தள விரதம். அதாவது தானியங்களை உடைத்தால் இரு அல்லது பல விதைகள் இருக்கும். ஆதலால் பருப்பு வகைகள் , புளி மிளகாய். காய்கறிகள் சாப்பிடக்கூடாது. ஆனால் வாழைக்காய், வாழைதண்டு, வாழப்பூ,, சேனை, வள்ளிகிழங்கு, இஞ்சி, மாங்காய் இஞ்சி, பொன்னாங்கண்ணி ஆகியவை உபயோகிக்கலாம்.. இதனால் ஆரோக்கியம், குடும்ப அமைதி உண்டாகும்.



Scanned with OKEN Scanner

# சாதுர்மாஸ்யம்

[ஸ்ரீ உப. வித்வான் ஈ. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, திருவத்திபுரம்]

மாஸே பவம் - மாஸ்யம்; மாதத்தில் செய்யப்பெறுவது மாஸ்யம். சதுர்ஷு மாஸேஷு பவம் - சாதுர்மாஸ்யம்; நான்கு மாதங்களில் செய்யப்பெறுவது சாதுர்மாஸ்யம். இங்கே, 'நான்கு மாதங்கள் என்றால் எவை? நான்கு மாதங்களில் செய்யப்பெறுவது என்ன?' என்ற வினா எழும். வர்ஷாகால மான நான்கு மாதங்களையே சாதுர்மாஸ்யம் என்ற சொல் குறிக்கிறது.

வர்ஷார்த்தமஷ்டௌ ப்ரயதேத மாஸாந்,
ராத்ர்யர்த்தஹேதோர் திவஸம் யதேத |
வார்தக்யஹேதோர் வயஸா நவேந
பரத்ரஹேதோரிஹ ஜந்மநா ச ||

பரம நாஸ்திகர்களையும், மிகுந்த போகத்தில் ஆழ்ந்திருப்பவர்களையும், உயர்ந்த உத்தியோகத்திலும் பெரிய வியாபாரத்திலும் ஈடுபட்டு அவகாசமே இல்லாதவர்களையும் நல்வழியில் ஈடுபடச் செய்வதற்கு ஸாரமானதும், உயர்ந்த கருத்தைக் கொண்டதும், மேற்கொண்டு அறிய ஆவல் பிறப்பிப்பதும், மனத்தைக் கவருவதுமான தத்துவத்தைச் சுருக்கமாகக் கூற வேண்டும். இவ்வாறு ஒருவரால் மற்றவருக்குக் கூறப்பெற்ற ச்லோகம் இது.

கண்ணுக்குப் புறம்பான அழியாத பேரின்பத்தைப் பெற இந்தப் பிறப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதை உறுதிப்படுத்த, கண்ணுக்கு இலக்கான மூன்றை உவமையாக இந்த ச்லோகத்தில் காட்டியிருக்கிறார்கள்.

1. மழைக்காலத்தில் வெளியில் செல்ல முடியாததனால், அப்பொழுது சரீரபோஷணத்துக்கு மற்ற எட்டு மாதங்களில் பொருள்களைச் சேகரித்துக்கொள்ள வேண்டும்.

2. இரவின் சுகத்துக்காகப் பகலில் உழைக்க வேண்டும்.

3. முதுமைப் பருவத்தில் நலமுடன் வாழ இளமையில் பாடுபட வேண்டும்.

இப்படி இந்த மூன்றை உவமையாகக் காட்டி, அப்ரத்யக்ஷமான பரமசுகத்திற்கு இந்தப் பிறவியைப் பயன்படுத்த வேண்டும் என்று கூறுகிறது இந்த ச்லோகம். இங்கே மழைக் காலம் நான்கு மாதங்கள் என்று தெரிகிறது.

மகாகவி காளிதாஸனின் 'மேகஸந்தேஶ'த்தில், 'தஸ்மிந்-நத்ரௌ கதிசிதபலாவிப்ரயுக்தஸ் ஸ காமீ நீத்வா மாஸாந்' என்ற ஶ்லோகத்தில், 'கதிசிந் மாஸாந்' என்ற பதத்திற்கு,

'அஷ்டௌ மாஸாந்' என்று உரை வகுத்திருக்கிறார் மல்லிநாதர். மேலே, 'ஶேஷாந் மாஸாந் கமய சதுர:' என்பதனால், கழிக்க வேண்டிய வர்ஷாகாலம் நான்கு மாதங்கள் என்று தேறுகிறது.

மழைக் காலத்தில் தேவையில்லாமல் அதிகமாக வெளியில் நடமாடக்கூடாது. குளிர்ந்து ஈரப்பசையுள்ளபடியால் எங்கும் ஜந்துக்கள் அதிகமாகத் தோன்றும். அவை காலில் அகப்பட்டு இறக்க நேரிடும். 'த்ருஷ்டிபூதம் ந்யஸேத் பாதம்' என்றபடி, சாதாரண காலத்திலேயே பெரியோர் குனிந்து பார்த்தே கால் வைத்து நடப்பார்கள். மழைக் காலத்தில் மிகுந்த எச்சரிக்கையோடு நடப்பார்கள். துறவிகள் இதை மிகவும் அவசியமாகப் பின்பற்றுகின்றனர். இதற்காக வராகப்பெருமாள் நாயகனையும் பூமிப்பிராட்டியையும் பூஜித்து ஸங்கல்பம் செய்துகொண்டு ஸ்நானம் முதலானவற்றுக்கு நல்ல இடத்திலிருந்து மண்ணைச் சேகரித்து வைத்துக்கொள்வார்கள்.

சாதுர்மாஸ்யத்தில் விஷ்ணுவைப் பூஜிக்க வேண்டும் என்று விதித்துள்ளது.

ஆஷாடஸ்ய ஸிதே பக்ஷே, ஏகாதஶ்யாமுபோஷித: |
சாதுர்மாஸ்யவ்ரதாநீஹ க்ருஹ்ணீயாத் பக்திபூர்வகம் ||

ஆஷாடமாதத்தில் சுக்லபக்ஷ ஏகாதசியில் உபவாஸம் விரதத்தை அநுஷ்டிக்க வேண்டும். இந்த ஆஷாட சுத்தப்ரதமை ஆனிமாத இடையிலும் வருவதுண்டு.

மிதுநஸ்தே ஸஹஸ்ராம்ஶௌ பூஜயேந் மதுஸூதநம் |
துலாராஶௌ கதே ஸூர்யே புநருத்தாபயேத் ஹரிம் ||

ஆனி மாதத்தில், ஆஷாட சுத்த ஏகாதசியில் பகவான் சயனித்துக்கொள்ளுகிறார். இதை, 'ஶயன ஏகாதசி' என்று கூறுவர். புரண்டு சயனித்துக்கொள்வதைப் 'பரிவர்த்தன ஏகாதசி' என்றும், ஐப்பசி மாதத்தில் எழுந்திருப்பதை 'உத்தான ஏகாதசி' என்றும் கூறுகின்றனர். இந்த மாதங்களில் விவாகாதி சுப காரியங்களைச் செய்யாமல், பகவானைப் பூஜிப்பர். சக்ரம் சங்கம் கதையோடு கூடிய விஷ்ணுப் பிரதிமையில் விஷ்ணுவை ஆவாகனம் செய்து அர்க்ய பாத்ய ஆசமனாதிகளைச் சமர்ப்பித்துப் பால் தயிர் தேன் பொரி நெய் இவற்றினால் திருமஞ்சனம் செய்து, கந்த புஷ்ப தூப தீபாதி உபசாரங்களைச் சமர்ப்பித்து நிவேதனம் செய்து, இதிஹாஸ புராணங்களைப் படனம் செய்து,

ஸுப்தே த்வயி ஜகந்நாதே ஜகத் ஸுப்தம் பவேதிதம் |
விபுத்தே த்வயி புத்யேத ஜகத் ஸர்வம் சராசரம் ||

"ஜகந்நாத! தேவரீர் யோகநித்திரை கொள்ளும்பொழுது அண்ட சராசரங்கள் யாவும் நித்திரையடைகின்றன (மங்குகின்றன). தேவரீர் யோகநித்திரையை விடும்போது உலகம் விழித்தெழுகிறது. ஆகையால், தேவரீர் நித்திரை கொள்ளும் பொழுது விரதத்துடன் தேவரீரைப் பூஜிக்கிறேன்" என்று ஸங்கல்பம் செய்துகொண்டு விரதத்தை அநுஷ்டிப்பார்கள்.

இந்த விரதகாலத்தில் இனிப்பை விட்டால் எல்லாருக்கும் இனியனாக இருப்பான். எண்ணெயை விட்டால் அவிச்சின்ன

Scanned with OKEN Scanner

மான ஸந்ததியைப் பெறுவான். காரத்தை விட்டால் சத்துரு ஜயம் உண்டாகும். நெய் அருந்துவதை விட்டால் அழகான அங்கங்களைப் பெறுவான். வாசனைத் திரவியங்களை விட்டால் ஸௌபாக்கியத்தைப் பெறுவான். புஷ்பத்தையும் போகத்தையும் விட்டால் ஸ்வர்க்கவாஸம் ஏற்படும். யோகத்தை அவலம்பிப்பவன் பரமபதத்தை அடைவான். தாம்பூலத்தை விட்டவன் இனிய குரலைப் பெறுவான்.

ஹரௌ ஸுப்தே விஶேஷேண ஹரேர் நாம படந் ஜபந் |
தத்பலம் கோடிகுணிதம் லபதே த்விஜஸத்தம ||
ஸ்நாநம் தாநம் ஜபோ ஹோம:
ஸ்வாத்யாயோ தேவதார்ச்சநம் |
சாதுர்மாஸ்யக்ருதம் யச்ச ஸர்வம் ஹி சாக்ஷயம் பவேத் ||
ஏககாலம் த்விகாலம் வா புராணம் ஶ்ருணுதே ச ய: |
ஸர்வபாபவிநிர்முக்தோ விஷ்ணுலோகம் ஸ கச்சதி ||

சாதுர்மாஸ்யத்தில் ஹரிநாம ஸங்கீர்த்தனம், ஸ்நானம் ஜபம் ஹோமம், புராண இதிஹாஸ படனம் தேவதாபூஜனம் இவற்றை நியமத்துடன் செய்வது அவசியம். இவற்றுள் ஒவ்வொன்றும் பெரும்பயனை அளிக்கும்.

மது பக்ஷயதே யஸ்து ஸுப்தே தேவே ஜநார்தநே |
மஹத் பாபம் பவேத் தஸ்ய வர்ஜநே யத் ஶ்ருணுஷ்வ தத் ||
ஸர்வயஜ்ஞைஶ்ச விவிதைர் யத் பலம் ததவாப்நுயாத் |
ய: க்ஷிபேதேகபக்தேந நரோ மாஸசதுஷ்டயம் ||
யாவந்தி ச முஹூர்த்தாநி உதிதோதிதபாஸ்கரே |
தாவத் வர்ஷஸஹஸ்ராணி விஷ்ணுலோகே மஹீயதே ||
வித்தவாந் ஸுபகஶ்சைவ குலே ஶ்ரீமதி ஜாயதே |
துலஸீதிலதர்பைஶ்ச யே குர்வந்தி ச தர்ப்பணம் ||
தத்பலம் கோடிகுணிதம் சாதுர்மாஸ்யே விஶேஷத: |
யதா ஸுப்தே ஹ்ருஷீகேஶே
குர்யாத் சைதத் த்ரயாந்விதம் |
பதம் வா பதமர்தம் வா ரிசாம் சார்தரிசாம் ததா |
விஷ்ண்வக்ரே யே ப்ரகாயந்தி
முக்தாஸ்தே நைவ ஸம்ஶய: ||

பகவான் யோகநித்திரையில் இருக்கும்போது விரதம் இருக்க வேண்டும். இந்த விரத சமயத்தில் போக்கியமான வஸ்துக்களைச் சாப்பிடுவது குற்றம். குற்றமுள்ளதை விலக்கி விரதமிருந்தால் எல்லாப் பாக்கியபலனும் உண்டாகும். ஒரு வேளை ஆகாரம் கொள்பவன் விஷ்ணுலோகத்தில் கொண்டாடப் பெறுகிறான். பிறகு மறுபிறப்பில் உயர்ந்த குலத்தில் பிறந்து மேன்மையடைவான். துளசி திலம் தர்ப்பம் இவற்றினால் தர்ப்பணம் செய்வது பல கோடி மடங்கு அதிகமான பலனைக் கொடுக்கும். இக்காலத்தில் பகவத் ஸந்நிதியில் வேதாத்தியயனம் செய்தால் முக்தியை அடைவார்கள்.

பகவான் யோகநித்திரை கொள்ளுகிறவரையில் விரதம் இருந்து உத்தானமான பிறகு விரதோத்யாபனம் செய்ய வேண்டும். அப்பொழுது பிராம்மணர்களுக்கு அறுசுவையுணவு அளித்து, விசேஷ தானாதி உபசாரங்களைச் செய்து, திருப்தி

Scanned with OKEN Scanner

செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் ப்ரஹ்மலோகப்ராப்தி பர்யந்தமான பலன் ஏற்படும்.

இந்தச் சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தைச் சில ஸம்பிரதாயஸ்தர்கள் வியாஸ பூஜை என்று பெயரிட்டு அழைப்பர். ஆஷாட பூர்ணிமையை வியாஸ பூர்ணிமை என்று அழைப்பது வழக்கம்.

சாந்திராயணரீதியான ஆஷாட சுத்தம் ஆனி மாதத்திலே சில சமயம் வரும். ஆக அந்தப் பௌர்ணமியும் ஆனி மாதத்திலேயே வருவதுண்டு. அந்தச் சமயத்தில் வேதவியாஸரையும் ஆசார்யர்களையும் எலுமிச்சம்பழத்தில் ஆவாகனம் செய்து பூஜிப்பார்கள். ஆறு பிரிவுகளாகக் கொள்வர். ஒவ்வொரு பிரிவிலும், ஞானத்திற்கு மூலபுருஷர்களாக இருக்கும் ஐந்து பேரை ஆவாகனம் செய்து பூஜிப்பார்கள்.

விஷ்ணுவின் அவதாரமாய், பரத்துவத்தையும் ஸௌலப்யத்தையும் நன்றாகப் பிரகாசப்படுத்தின கிருஷ்ண பரமாத்மாவை மத்தியில் ஆவாகனம் செய்து, அவருடைய அம்சசக்திகளான வாஸுதேவ - ஸங்கர்ஷண - ப்ரத்யும்ந - அநிருத்தர்களை நான்கு பக்கங்களிலும் ஆவாகனம் செய்வர். இதை, 'கிருஷ்ண பஞ்சகம்' என்பர்.

இரண்டாவதாக, நாராயணனுடைய அவதாரமான வியாஸரை மத்தியில் ஆவாகனம் செய்து, அவருடைய சிஷ்யர்களான ஸுமந்து, ஜைமினி, பைலர், வைசம்பாயனர் என்ற நால்வரை நான்கு திசைகளிலும் ஆவாகனம் செய்து பூஜிப்பர். இதற்கு, 'வியாஸபஞ்சகம்' என்று பெயர்.

மூன்றாவதாக, ஆதிசங்கரரை மத்தியிலும், அவருடைய சிஷ்யர்களான பத்மபாதர், ஸுரேஶ்வரர், ஹஸ்தாமலகர், தோடகர் என்ற நால்வரை நான்கு பக்கங்களிலும் ஆவாகனம் செய்து பூஜிப்பர். இதை, 'பகவத்பாதபஞ்சகம்' என்பர்.

நான்காவதாக, பிரம்மஞானிகளும் பிரம்மபுத்திரர்களுமான ஸனகாதிகளைப் பூஜிப்பது. ஸனகரை நடுவிலும், ஸநந்தன - ஸநாதன - ஸநத்குமார - ஸநத்ஸுஜாதர்களை நாற்புறங்களிலும் ஆவாகனம் செய்து பூஜிப்பர். இதற்கு 'ஸனகபஞ்சகம்' என்று பெயர்.

ஐந்தாவதாக, திரவிடாசாரியரை மத்தியிலும், சங்கர பகவத்பாதரின் ஆசார்யரான கோவிந்தபாதரையும், ப்ராசார்யரான கௌடபாதரையும், அத்வைதமத முக்யஸ்தர்களான ஸம்க்ஷேபகாசார்யரையும், விவரணாசார்யரையும் நான்கு திக்குகளில் ஆவாகனம் செய்து பூஜிப்பர். இதை, 'த்ரவிட பஞ்சகம்' என்பர்.

ஆறாவது, விரதாநுஷ்டானம் செய்பவருடைய ஆசார்யரையும், அவருடைய ஆசார்யரையும், அவருடைய ஆசார்யரையும், அவருக்கும் ஆசார்யரான குருவையும் ஆவாகனம் செய்து பூஜிப்பர். இதற்கு, 'குருபஞ்சகம்' என்று பெயர். இப்படி வியாஸபூஜையை அத்வைத மதஸ்தர்கள் நடத்துகிறார்கள். எந்தப் பெயரிட்டாலும் பகவானையும் பகவத் பக்தர்களையும் பகவானுடைய சயனம் முதற்கொண்டு உத்தான பர்யந்தமான வர்ஷாகாலமான நான்கு மாதங்களில் ஸங்கல்பித்துக்கொண்டு பூஜை நடத்துகிறபடியால், இதைச் 'சாதுர்மாஸ்யம்' என்று கூறுவது பொருத்தமேயாகும்.

Scanned with OKEN Scanner



श्रीमद्वेदान्त रामानुज यतिकृपया रङ्गिणि न्यस्तभारं
तत्सम्प्राप्तागमान्त द्वितयमनुगणं शिष्टतापूर्णमग्र्यम् ।
श्रेष्ठ श्रीरङ्गरामानुजमुनिकरुणालब्धमोक्षाश्रमं तं
सत्त्वस्थं श्रीवराहं यतिवरमनघं देशिकं संश्रयामि ॥

Scanned with OKEN Scanner



श्रीमदाण्डवन् श्रीवराह महादेशिकन् अनुगृहीत

# श्रीवराह त्रिकम्

महतानन्त कन्दर्प महार्णव महीयते |

महापापौघविध्वंस महावराहमाश्रये ||1||

महीधर महाक्रान्त महाबल पराक्रमम् |

मही पालक संसेव्यम् महावराहमहं भजे ||2

मन्दस्मित मुखाम्भोजं महनीयगुणार्णवम् |

वन्दारु मन्दकन्दर्प श्रीमुष्णेशं नमाम्यहम् ||3|

# ஸ்ரீ வராஹ த்ரிகம்



மஹதானந்த கந்தர்ப்ப மஹார்ணவ மஹீயதே I
மஹாபாபௌகவித்வம்ச மஹாவராஹமாஸ்ரையே II ( 1)

மஹீதர மஹாக்ராந்த மஹாபல பராக்ரமம் I
மஹீ பாலக ஸன்சேவ்யம் மஹாவராஹம் அஹம் பஜே (2)

மந்தஸ்மித முகாம்போஜம் மஹநீய குணார்ணவம் I
வந்தாரு மந்தகந்தர்ப்ப ஸ்ரீ முஷ்நேஷம் நமாம்யஹம் II (3)

*******

Scanned with OKEN Scanner

# POORVASHRAMAM OF HH SRI VARAHA MAHADESIKAN

 

**In poorvashramam, HH 12th Srimad Andavam was known as Dr Shri Srimushnam Vangipuram Yamunachariar. HH was the 3rd son in Poorvasrama of HH Srimad Srimushnam Andavan. Shri Yamunachariar Swami qualified as a PhD from BharathiDasan University in 2009 after qualifying as Vyakarana Siromani (1989), MA (Sanskrit) (2000) & MPhil from BharathiDasan University (2002). Yamunachariar Swami has undergone extensive Kalakshepams (Grantha Chatushtyam) under great srivaishnavaite scholars & saints like HH Srimad Thirukkudanthai Andavan Swami (9th Peetathipathi of Srimad Andavan Asramam) renowned as the Tiruppavai Jeer, HH Srimad Srimushnam Andavan (11th Andavan Swami) & Late Padma Bhushan Dr Shri NS Ramanuja Tatachariar Swami (Retd VC of Sanskrit Vidya Peetam at Tirupati, recipient of 'President of India' award for great sanskrit scholars & "Chevalier" award – highest civilian award for foreigners by French Government) et al. The Swami's PhD thesis is in Mimamsa Sastra by researching on a book by late Shri Tirupputkuzhi Swami on Shri Kumarila Bhattar's Mimamsa: the Swami is well versed is Sanskrit & Tamizh.**

**HH Srimad Srimushnam Andavan has performed Manthropadesams (Preksha Mantram) to Shri Yamunachariar**

Scanned with OKEN Scanner

**many years ago, a pre-requisite for taking Sannyasa. HH Srimad Srimushnam Andavan had also instructed 4 Sishyas that in the event of any danger of the Peetam being vacant, they should ensure that Sri Yamunan must be considered.**






## ப்ரக்ருதம் ஆண்டவன்
## ஸ்ரீமத் ஸ்ரீ வராஹ மஹாதேசிகன்
# ஆஸ்ரம ஸ்வீகாரத்திற்கு முன்





Scanned with OKEN Scanner





Scanned with OKEN Scanner